செங்கல்பட்டு மாவட்டம், மறைமலை நகரில் வருகிற 4ஆம் தேதியன்று கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்கும் திராவிடர் கழகம் சார்பில் நடைபெற உள்ள சுயமரியாதை இயக்க நூற்றாண்டு நிறைவு விழாவின் மாநாட்டின் முன்னேற்பாடு பணிகளை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், த.வினோத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

சென்னை கீழ்ப்பாக்கம் தேராபந்த் மகிளா மண்டல் நடத்தும் தொடர் 5 நாள் ஜெயின் மக்கள் கலை மற்றும் கைவினை பொருட்கள் கண்காட்சியை இந்து சமய அறநிலைத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தொடங்கி வைத்தார். இத்தொடக்க விழாவில் இயக்குனர் நடிகர். பாக்கியராஜ், அகில பாரத தேரா பந்த் தலைவர் ரமேஷ் தோஹா, அகில பாரத தேரா பந்த் மகளிர் மண்டல் அறங்காவளர் நீலம் சேத்தியா மற்றும் திரளான ஜெயின் சமூகத்தினர் கலந்து கொண்டனர்.

மதுவிலக்கு அமலாக்கப் பணியில் சிறப்பாக செயல்பட்ட

ஐந்து காவல்துறை பணியாளர்களுக்கு காந்தியடிகள் காவலர் விருது!

முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, அக்.2- முதலமைச்சர் அவர்கள், மதுவிலக்கு அமலாக்கப் பணியில் பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியமைக்காக

(i) ப.நடராஜன், காவல் ஆய்வாளர், மத்திய நுண்ணறிவுப் பிரிவு, விழுப்புரம் மண்டலம்,

(ii) மா.சத்யாநந்தன், காவல் உதவி ஆய்வாளர், ஆரோவில் காவல் நிலையம், விழுப்புரம் மாவட்டம்,

(iii) சு. மணிகண்டன், காவல் உதவி ஆய்வாளர், சின்னசேலம் காவல் நிலையம், கள்ளக்குறிச்சி மாவட்டம்,

(iv) க. நடராஜன், காவல் உதவி ஆய்வாளர், புத்தூர் காவல் நிலையம், கடலூர் மாவட்டம் மற்றும்

(v) வா. பெ. கண்ணன், தலைமைக் காவலர்-1403, மத்திய நுண்ணறிவுப் பிரிவு, சேலம் மாவட்டம்,

ஆகியோருக்கு 2025-ஆம் ஆண்டுக்கான காந்தியடிகள் காவலர் விருது வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

இவ்விருது, முதலமைச்சர் அவர்களால் 2026-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் நாள் குடியரசு தினத்தன்று வழங்கப்படும். இவ்விருதுடன், பரிசுத்தொகையாக ரூ.40,000/- ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும்.

கோயம்பேட்டில் ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கப்பட்ட

ரூ.13 கோடி மதிப்பிலான திருக்கோயில் வணிக மனை மற்றும் கட்டிடம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, அக். 2- இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மேலும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அலுவலகத்தில் மாதந்தோறும் நடைபெறும் சீராய்வுக் கூட்டங்களின் போது, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு துறை சார்ந்த திட்டங்கள் மற்றும் சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றத்தினை ஆய்வு செய்யும் போது திருக்கோயில் சொத்துகளை ஆக்கிரமிப்பில் இருந்து மீட்கும் பணிகளுக்கு தனி முக்கியத்துவம் அளித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தி வருகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தி.மு.க. அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இதுவரை 1,038 திருக்கோயில்களுக்குச் சொந்தமான ரூ.8,015.80 கோடி மதிப்பீட்டிலான 7,930.34 ஏக்கர் நிலங்கள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளதோடு, நவீன தொழில்நுட்ப கருவிகளின் உதவியோடு திருக்கோயில் fளுக்கு சொந்தமான 2,15,385 ஏக்கர் நிலங்கள் அளவீடு செய்யப்பட்டு 1,41,820 எல்லை கற்கள் நட்டு பாதுகாக்கப் பட்டுள்ளன.

இந்நிலையில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் நேற்று (01.10.2025) ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்ட சென்னை, அரும்பாக்கம் உத்தனாச்சியம்மன், மங்களேஸ்வரர் மற்றும் பால விநாயகர் திருக்கோயிலுக்கு சொந்தமான கோயம்பேடு ஜவஹர்லால் நேரு சாலையில் அமைந்துள்ள ரூ. 13 கோடி மதிப்பிலான 8,742 சதுர அடி வணிக மனை மற்றும் கட்டிடத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வின் போது இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், மண்டல இணை ஆணையர் எஸ். மோகன சுந்தரம், உதவி ஆணையர் கி.பாரதிராஜா மற்றும் செயல் அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவொற்றியூர் மேற்குப் பகுதி கழக மூத்த முன்னோடி – மறைந்த

எம்.வேலு குடும்பத்தினருக்கு கலைஞர் அறக்கட்டளை சார்பில் ரூ. 25 ஆயிரம் நிதியுதவி!

வை.ம.அருள்தாசன் முன்னிலையில் – எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை,அக்.2- திமுக என்னும் மாபெரும் இயக்கத்தின் 75 -ம் ஆண்டு பவள விழா அண்மையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. இந்நிலையில் கழகத்திற்காக பணியாற்றிய - கழக வளர்ச்சிக்கு அரும்பாடு பட்டு மறைந்த தொண்டர்களுக்கு கழகத்த லைவர் அவர்களின் வழிகாட்டுதலில் கலைஞர் அறக்கட்டளை மூலம் நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது.

திருவொற்றியூர் மேற்கு பகுதி 6வது வட்டம் டி.கே.எஸ். நகரில் வசித்து வந்த கழக மூத்த முன்னோடி எம்.வேலு அவர்களின் குடும்பத்தின் நலன் கருதி உதவித்தொகைக்கு மாவட்ட பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம. அருள்தாசன் மூலம் விண்ணப்பிக்கப்பட்டது.

இந்நிலையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் அறக்கட்டளையிலிருந்து கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் ஆணையேற்று மறைந்த கழக மூத்த முன்னோடி மறைந்த எம்.வேலு அவர்களின் குடும்பத்தினருக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்.எல்.ஏ. ரூ.25000/-க்கான காசோலையை வழங்கினார்.

இந்நிகழ்வில் திருவொற்றியூர் மேற்கு பகுதி கழக செயலாளர் வழக்கறிஞர் வை.ம.அருள்தாசன், மத்திய பகுதி கழக செயலாளர் ஏ.வி. ஆறுமுகம் எம். சி, மேற்கு பகுதி பொருளாளர் எம். வஜ்ரவேல் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

விஜயகுமார் தலைமை!

ஊராட்சிகளில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம்!

செஞ்சிமஸ்தான் எம்.எல்.ஏ.தொடங்கி வைத்தார்!

செஞ்சி, அக்.2- விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் ஒட்டம்பட்டுமாத்தூர் திருகை ஊராட்சியில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாம் நடைபெற்றது.

செஞ்சி ஒன்றிய பெருந் தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர்கள் பிரேமாதிருமலை, தேவகடாட்சம் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அறிவுறுத்திய முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டும் என அதிகாரிகளுக்கு அவர் தெரிவித்தார்.

முன்னதாக ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்ட முகாமில் அனைத்து துறை சார்பில் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம். எல்.ஏ. நேரில் சென்று பார்வையிட்டு பொது மக்களிடம் இருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

தொடர்ந்து மக்கள் நல் வாழ்வு மற்றும் மருத்துவ துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச் சத்து பெட்டகத்தினையும், ரத்த அழுத்தம், நீரழிவு நோய், சர்க்கரை, நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்துமாத்திரை பெட்டகத்தினையும் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ வழங்கினார்.

முகாமில் ஒட்டம்பட்டு, மாத்தூர் திருக்கை, திருவதிகுன்னம், தென்புதுப்பட்டு, காரை,ஆகிய கிராமங்களிலிருந்துஏராளமான பொது மக்கள் வருகை தந்து பல் வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி னார்.

நிகழ்ச்சியில் வட்டாரவளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், மாவட்ட கவுண்சிலர் அரங்க ஏழுமலை,ஊராட்சி மன்ற தலைவர்கள் சாவித்திரி தயாளன், சிவக்குமார், கலையாசி வெங்கடேசன், ஒன்றிய அவை தலைவர் வாசு, ஒன்றிய துணை செயலாளர் மதியழகன், மாவட்ட பிரதிநிதி அய்யாதுரை, நிர்வாகிகள் சக்திவேல், குபேந்திரன்,தேவராஜ், நாகராஜ், ஜெகநாதன்,வேலுச்சாமி, ரவிச்சந்திரன், இளைய பெருமாள், கிருஷ்ணன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அபிராமிஅனைவருக்கும் நன்றி கூறினார்.

தருமபுரியில் வட கிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து

அனைத்துத்துறை அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம்!

மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, அக். 2- தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக அதியன் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் ரெ.சதீஸ் தலைமையில் வடகிழக்கு பருவமழை காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மற்றும் மேற்கொள்ள வேண்டிய தயார்நிலை பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுக்கான ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது,

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையானது அக்டோபர் மாதத்தில் தொடங்கவுள்ளதால், அதிக மழை பொழியும் பட்சத்தில் அதனால் ஏற்படும் வெள்ள பாதிப்புகளைத் தடுக்கும் வகையிலும், இழப்புகளைக் குறைக்கும் நோக்கத்திலும் சரியாகத் திட்டமிட்டு பேரிடர் முன்னேற்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். தருமபுரி மாவட்டத்தில் கடந்த காலங்களில் பெய்த மழையின் அடிப்படையில் அதிகளவில் பாதிப்பிற்குள்ளாகும் தாழ்வான பகுதிகளின் (Vulnerable Area) விவரப்பட்டியல், அவசரகால போக்குவரத்து வழித்தடங்கள், போக்குவரத்து ஊர்திகளின் விவரங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். பொதுப்பணித் துறை/ஊரக வளர்ச்சித் துறைகளின் கட்டுப்பாட்டில் உள்ள நீர் நிலைகளில் நீர் இருப்பு விவரம் பற்றிய பட்டியல் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

ஏற்கனவே கண்டறியப்பட்டுள்ள நிவாரண முகாம்களான சமுதாயக்கூடங்கள்/ திருமணமண்டபங்கள், பள்ளிகள் பற்றிய விவரப்பட்டியல் தயார் நிலையில் வைத்திருப்பதோடு, மேற்கண்ட இடங்களை ஆய்வு செய்ய வேண்டும். மழை வெள்ள காலத்தில் பொதுமக்களுக்கு குடிநீர்; விநியோகம் செய்ய தேவையான வாகனங்கள், தண்ணீர் டேங்க்குகள், போர்டபிள் ஜெனரேட்டர்கள், டார்ச் லைட்கள், உணவு சமைக்க பாத்திரங்கள், கேஸ் அடுப்புகள், நியாய விலைக்கடைகளில் தேவையான உணவு பொருட்களின் இருப்பு ஆகியன தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

சாலையோர மரங்கள் சேதமடைந்தால் மீட்பு பணிக்கு ஜேசிபி, புல்டோசர், மற்றும் மரங்களை வெட்டும் இயந்திரங்கள் மற்றும் பல்வேறு அவசரதேவைகளுக்காக பயன்படக் கூடிய போர்டபில் ஜெனரேட்டர்கள், டார்ச் லைட் ஆகியவற்றை நல்ல நிலையில் பராமரித்து தயார் நிலையில் வைத்திருக்க தொடர்புத்துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. சாலைகளில் மழைநீர் தேங்காவண்ணம் முன்கூட்டியே சீர்படுத்த வேண்டும். அணைக்கட்டுகள், ஏரிகளின் கரைப்பகுதியில் நீர் மட்டம் அதிகரிக்கும் போது பாதுகாப்பு நடவடிக்கைக்காக தேவையான அளவிற்கு மணல் மூட்டைகள் இருப்பு உள்ளதை உறுதிபடுத்த வேண்டும்.

அவசரக்காலங்களில் உதவிக்கு அழைக்க சுய உதவிகுழுக்கள்/தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் உறுப்பினர்களின் விவரப்பட்டியல் மற்றும் பாம்பு பிடிப்பவர்கள் விவரம் ஆகிய விவரங்களை தொலைபேசி எண்களுடன் தயார் நிலையில் வைக்க வேண்டும். நடமாடும் மருத்துவ குழுக்கள், அவர்களின் தொலைபேசி எண் விவரங்கள் தயார் நிலையில் வைக்க வேண்டும். மழைக் காலம் தொடங்கும் முன்னரே குடியிருப்பு பகுதிகளில் மழை நீர் தேங்காவண்ணம் தெருச்சாலைகளை சீர்படுத்த வேண்டும், கழிவுநீர்கால்வாய்களை தூர்வார வேண்டும், தெருக்களில் கொசு ஒழிப்பு மருந்து அடித்தும் குளோரின் பவுடர் தூவியும் நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் அனைத்து குடிநீர் கிணறுகள், மேல்நிலை நீர்த் தேக்க தொட்டிகள் அனைத்தும் சுத்தப்படுத்தி தேவையான அளவு குளோரின் பவுடர் கலந்து குடிநீர் விநியோகம் செய்யவேண்டும். அவசரத் தேவைகள்/உதவிகள்/பேரிடர் கால வீடு/கால்நடை/மனித உயிரிழப்பு/ போக்குவரத்து பாதிப்பு/சேதங்கள் பற்றிய தகவல்களை மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவிக்க மாவட்ட கட்டுப்பாட்டு மைய இலவச தொலைபேசி எண்கள் 1077, 04342 231077, 04342231500 மற்றும் 04342230067ல் தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டது. வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள்/வட்டாட்சியர் அலுவலகங்களில் 24x7 கட்டுப்பாட்டு மையம் அமைத்து சுழற்;சிமுறையில் பணிபுரிய உரிய அலுவலங்களில் பணிபுரியும் அலுவலர்களை மாற்றுப்பணியில் நியமனம் செய்து பேரிடர்காலத்தில் பொதுமக்களிடமிருந்து வரப்பெறும் புகார்களை பதிவேடுகளில் பதிவுசெய்து அவ்வப்போது மண்டல அலுவலர்கள் புகார்பதிவேட்டில் பதியப்படும் புகார்களின் நடவடிக்கை விவரத்தினை ஆய்வு செய்யவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 – 11வது வார்டில் பம்மல் தெற்கு பகுதி கழகச் செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி,உதவி செயற் பொறியாளர் இ. சத்தியசீலன்,சுகாதார அலுவலர் மாரிமுத்து ஆகியோர் கள ஆய்வு மேற்கொண்டார்கள். இதில் வட்டக் கழக செயலாளர், மாவட்ட,மாநகர, பகுதி, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், மற்றும் ஊர் பொதுமக்கள் உடன் இருந்தனர்.

சவுதி அரேபியா, தமாமில் சிக்கித் தவித்த

3 தமிழர்கள் உள்பட 22 இந்தியர்கள் தாயகம் திரும்பினர்!

கழக அயலக அணியினர் நடவடிக்கை!

தமாம், அக். 2- சவுதி அரேபியா, தம்மாமில் சிக்கித்தவித்த 3 தமிழர்கள் உட்பட 22 இந்தியர்கள் நாடு திரும்ப அனைத்து உதவியையும் தி.மு.க. அயலக அணி மற்றும் தமிழ்நாடு நலச்சங்கம் இணைந்து அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்பட்டதைத் தொடர்ந்து இவர்கள் தாயகம் திரும்பினர்.

பல்வேறு சிக்கல்கள் பல்வேறு வழக்குகள் சம்பந்தமாக பல மாதங்களாக சவுதி அரேபியாவில் வேலைக்கு வந்த தமிழ்நாடு, மகாராஷ்டிரா, பஞ்சாப், கர்நாடக, கேரளா, ஆந்திர, பீகார் மாநிலங்களைச் சேர்ந்த 22 இந்தியர்கள் வழக்குகள் சம்பந்தமாக தாயகம் செல்ல வழி இல்லாமல் சிக்கி தவித்து வந்தனர்.

தி.மு.க. அயலக அணி நிர்வாகிகள் மயிலாடுதுறை வெங்கடேசன் தி.மு.க. அயலக அணி முன்னாள் துணை அமைப்பாளர் திருச்சி ஆரிஃப் மஃபூல் தலைமையில் நாடு திரும்ப ஆவன செய்தார்கள்.

இந்தியத் தூதரகத்தின் மற்றும் சவுதி அரேபியா அரசாங்கத்தின் கடந்த ஒரு மாத காலமாக கடுமையாக முயற்சிகளை அயலக அணியினர் செய்தனர்.

இதன் காரணமாக மேற்குறிப்பிட்ட மூன்று தமிழர்கள் உள்பட 22 இந்தியர்களை (Final Exit)இறுதி பயண சான்றிதழ் பெற்று அவர்களிடம் சவுதி அரசாங்கம் இந்திய தூதரகம் ஒத்துழைப்புடன் வழங்கப்பட்டது இதனைத் தொடர்ந்து அவர்கள் நாடு திரும்ப அனுமதிக்கப்பட்டனர்.

இதற்காக அவர்கள் அனைவரும் நன்றிகள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் TNWA தமிழ்நாடு நலச்சங்க செயலாளர் முகவை சீனி முகமத் & இணைச்செயலாளர் துறையூர் கமால் பாஷா, & தொழில்நுட்ப அணி சென்னை இம்ரான் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டவர்கள் கேரளா சமூக செயற்பாட்டாளர் :

நாசு சவுக்கத் அலி இலங்கை சமூக சேர்ப்பாளர் : நவரத்தினம், கர்நாடக செயல்பாட்டாளர் ஹனீபா, தமிழ்நாடு நலச் சங்க நிர்வாகிகள் முஹம்மது நூஹு, அபூரையான், திருச்சி யூனிஸ் முகம்மது பாரூக், விளையாட்டு அணி நூர் முகமது, இளைஞர் அணி ஜான், ஏர் போர்ட் கணேசன், ஆனந்த் ஆகியோர் உடன் இருந்தனர்.

தருமபுரி மாவட்டம் அடிலம் ஊராட்சி பகுதியில் “உங்களுடன் ஸ்டாலின்” முகாமினை மாவட்ட ஆட்சியர் மற்றும் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர், தி.மு.க. கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி ஆகியோர் துவக்கி வைத்து அன்றைய தினம் பெறப்பட்ட மனுக்கள் மீது அன்றே நடவடிக்கை எடுக்கப்பட்டு தீர்வு காணப்பட்ட மனுதாரர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். உடன் தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள் எம்.வீ.டி.கோபால், அடிலம்.அன்பழகன், பாலக்கோடு தொகுதி பார்வையாளர் டி.எம்.அரியப்பன், ஏ.வி.குமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.